1968 மார்ச் 8]

கும்பகோணம் நகராட்சி மன்றம்

*376 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கும்பகோணம் நகரசபையில் சென்ற 10 வருட காலத்தில் அட்வான்சாக தனியாருக்குக் கொடுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) கும்பகோணம் நகராட்சி மன்றம் கடந்த பத்தாண்டுகளில் தனியார்களுக்கு ரூ. 4,42,458·42 (நாலு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு ரூபாய் நாற்பத்திரண்டு காசு மட்டும்) முன் பணமாக வழங்கியுள்ளது.

(இ) ரூ. 3,56,289·58 (மூன்று இலட்சத்து ஐம்பத்தாறுயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது ரூபாய் ஐம்பத்தெட்டு காசு மட்டும்) இது வரை சரிக்கட்டப்பட்டுள்ளது. ரூ. 12,771·31 (பன்னிரண்டாயிரத்து எழுநூற்று எழுபத்தொரு ரூபாய் முப்பத்தொரு காசு மட்டும்) தனியார் களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. நிலுவையாக உள்ள முன் பணங் களைச் சரிக்கட்டுவதற்கு அவசியமான முயற்சிகளை மேற்கொண்டு வருவ தாகக் கும்பகோணம் நகராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது எந்த ஆண்டு முதற்கொண்டு எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது ? அப்படி கொடுக்கக் கூடிய அள விற்கு விதியிருக்கிறதா ? அதுபோன்று எதனுல் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 1958–59-ல் இருந்து இதுவரை யில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒப்பந்தக்காரர்களிடம் வேலைகளை முடிக்க முன்பணம் வழங்குவதற்கு நகராட்சி மன்றங்களுக்கு அதிகார மிருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு வேலைகளுக்கு முன்பணம் வழங்கி வேலை செய்யச்செய்ய கழித்திருக்கிறுர்கள். கணக்குகள் சரிக் கட்டப்பட்டிருக்கிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இதனுல் கும்பகோணம் நகரசபைக்கு நஷ்டம் ஏற்பட்டது என்று அரசு கருதுகிறதா ? அப்படி ஏற்பட்டிருந்தால் அதைத் திரும்பப்பெற என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி எந்த நஷ்டமும் ஏற் பட்டதாக இதுவரை தெரியவில்லை. ரூ. 401·39 காசுதான் வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்று கணக்கு கொடுத்திருக்கிறுர்கள். வேண்டிய நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிறது. வசூலாகும் என்று ஆணை யாளர் தெரிவித்திருக்கிறுர்கள்.

திரு. நா. காசிராமன் : இது கும்பகோணம் நகரசபையைப் பற்றியதாக இருப்பதால் நான் ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். முன் பணம் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறுர்கள். கும்பகோணம் எலக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன், சிமென்ட் கம்பனி இவைகளுக்கு அவ்வப்போது கொடுக் கவேண்டிய அடிப்படையில் இலாகாவின் அனுமதி பெற்றுத்தான் சிமென்ட் டுக்காக, எலெக்ட்ரிஸிட்டி கார்ப்பரேஷன், ஹவுஸ் சர்வீஸ் கனெக்ஷ னுக்காக, டெப்பாஸிட்டுக்காக இவை போன்றவற்றிற்கு கொடுக்கப்பட்ட முன் பணங்கள்தான் இதில் சேர்ந்திருக்கிறது என்பதுபற்றி அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : எலெக்ட்ரிசிட்டி சார்ஜஸ், சிமெண்ட் இவைகளுக்காக கொடுக்கப்பட்டிருப்பதாக குறிக்கப்பட்டிருக்கிறது. தொடர்பான கேள்வி புள்ளிவிவரங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென் பதற்காக கேட்கப்பட்டது. நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள் சில குறிப்பிட்ட இனங்களைச் சொல்வது மற்ற உறுப்பினர்களுக்கு அதன் பேரில் ஐயப்பாடு கூட ஏற்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தில் ஓர் வரி என்று தெரிவித்தார்கள். அது எந்த வரி என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் துணை வினா, மூல வினாவை ஒட்டியதாக இல்லாமலிருப்பதால் இதை அனுமதிக்க முடியவில்லை. வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

2. அமைச்சரின் விளக்கம்.

துணை வினாவின்-விடைக்குத் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 173-வது வினாவிற்கு விடை அளித்த மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் ஒரு துணை வினாவிற்கு அளித்த விடையில் ஒரு திருத்தம் செய்ய விரும்புகிறார்கள். அதை அனுமதிக்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : சேலம் மாவட்டத்தைப் பற்றி ஒரு விவரம் கேட்டார்கள். முதலில் இந்தக் குறிப்பு என்னிடம் இல்லாத காரணத்தினால் அந்தக் குறிப்பை இப்போது கூற விரும்புகிறேன்.[a] சேலம் மாவட்டத்தில் உள்ள குளங்கள், இப்போது புதிதாக அமைக்கப்பட்ட குளங்கள் இரண்டு. ஒன்று, செம்மலை சிவிலிக்கரடு, ஓமலூர் தாலுகாவில். இன்னொன்று, கன்னாரப்பனை கிராமத்தில் உள்ளது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. கவன ஈர்ப்பு.

குமரி மாவட்டத்தில் பருவமழையின்மையும், வரிகள் தள்ளுபடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் 41-வது விதியின்கீழ், உணவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்தை ஈர்க்க ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of Hon. the Minister for Food to a matter of urgent public importance, namely withering of crops in Kanyakumari district due to the failure of monsoon and the need for remission of land revenue and water-cess and also adequate supply of foodgrains to tide over the crisis in the ensuing lean months of this year.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பேரவைத் தலைவரவர்களே, பருவமழை பொய்த்ததன் காரணமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பயிர்கள் கருகிக் கொண்டிருப்பதாகவும், அதனால் நிலவரியையும், தண்ணீர் வரியையும் தள்ளுபடி செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதென்றும், உணவு தானியங்கள் போதுமான அளவு வழங்கப்பட வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பயிர் விளைந்து கொண்டிருந்த 65,000 ஏக்கரில், 20,000 ஏக்கர் நெற்பயிர்கள் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் காரணமாகக் கருகிவிட்டன. கிட்டும் நீரைக் கொண்டு முறைமாற்று வழிகளில் தண்ணீர் பாய்ச்சி, பயிர்கள் மேலும் கருகாமலிருக்க நடவடிக்கைகள்

---

[a] 109-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க